**தலைப்பு 223 - இலங்கை கடற்படை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 223 - இலங்கை கடற்படையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படையின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கடற்படையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ கூற்றுக்களில இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படையினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப்பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) மீண்டுவரும் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆண்டில் கடற்படையின் எரிபொருள் வழங்கும் செலவின பேரேட்டில் ரூபா 5,190,000,000 ஆன மொத்த தேறிய ஏற்பாட்டிலிருந்து ரூபா 971,051,975 அதாவது 19 சதவீதம் ஏனைய அமைச்சு, திணைக்களம், அரச நிறுவனம் மற்றும் வெளி நிறுவனங்களிற்காக விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டி இருந்த ரூபா 22,548,339 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படடு இருக்வில்லை. | வருமன தலைப்புகளில் மாத்திரம் நிலுவை வருமானத்தை காண்பிக்க வேண்டியதால் அறவிட வேண்டியிருந்த நிலுவை பட்டியல்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

(ஆ) அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003, 2004 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளறிகுரிய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மற்றும் தனி மீதிகளை வகைப்படுத்தும் பொழிப்பு பிரகாரம் கடன் மீதியில் ரூபா 31,690,373 ஆன வித்தியாசம் காணப்பட்டது. அவற்றில் 2005 ஆண்டிற்கு மாத்திரம் உரிய பெறுமதி ரூபா 31,668,645 ஆனதுடன் இவ் வித்தியாசத்தை பரீட்சிப்பதற்குரிய பதிவேடுகள் மற்றும் கணக்கு பொழிப்பு பிரதிகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. மேலும் நடைமுறையாண்டு இறுதியில் இவ் வித்தியாசத்தின் பெறுமதி ரூபா 21,625,626 ஆன போதும் இவ் வித்தியாசம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க நியமிக்கப்பட்ட குழுவினால் முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பரிசோதனை குழுவின் பரிந்துரை பிரகாரம் படிப் படியாக பதிவழிக்க தீர்மானிக்கப்பட்டதால் ரூபா 16,848,699 தொகைக்கான பதிவழித்தல்களிற்குரிய கடிதக் கோவைகள் பாதுகாப்பு அமைச்சிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. அம் மீதிகளை பதிவழித்த பின்னர் இரண்டாம் கட்டத்தில் கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் ஒற்றை கடன் மீதியை பதிவழிக்க திறைசேரியிற்கு சமர்பிக்கப்படவுள்ளது. இவ் வித்தியாசம் ஏற்பட்ட விதத்தை பரிசோதிக்க அக்காலப் பகுதிக்குரிய கணக்குப் பொழிப்புக்கள் கடற்படையிடம் இருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே குறித்த தகவல்களை பதிவேடுகளை கணக்கு பொழிப்புகளை முறையாக கோவைப்படுத்தி வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) வர்த்தக முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 504 பிரகாரம் வர்த்த முற்பண கணக்கொன்றை பேணிச் செல்லும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொறு காலாண்டு முடிவிலும் வியாபார கடன்படுனர் தொடர்பாக, வியாபார கடன்கொடுனர் தொடர்பாக, மூலப்பொருள், களஞ்சிய பொருட்கள் மற்றும் வழங்கல்கள் தொடர்பாக மற்றும் முற்பணக் கணக்கு எல்லைகள் தொடர்பான கூற்றொன்றை தயாரித்து அக் காலாண்டின் பின்னர் | 2023 ஆண்டில் சரியாக சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் காலாண்டு கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

எதிர்வரும் மாதம் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்பிக்க வேண்டிய போதும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே அவ்வறிக்கையை நிதிக்கூற்றுக்களுடனும் சமர்பித்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலி குடியரசின் நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் செலவின மதிப்பீட்டை முடியுமான அளவு சரியாக தயாரிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பான போதும், 2022 ஆண்டில் மீண்டெழும் 06 செலவின விடயங்களிற்கு நிதிப்பிரமாணம் 66 ஊடாக ரூபா 701,200,000 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | மீண்டெழும் 06 செலவின விடயங்களிற்கு நிதிப்பிரமாணம் 66 ஊடாக இப் பெறுமதி மாத்திரம் மாற்றப்பட்டுள்ளது. | மதிப்பீடு முடியான வரை சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 21 திகதி இலக்கம் 03/2021 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 04(6) பிரிவு பிரகாரம் மற்றும் நிதிப்பிரமாணம் 94(1) பிரிவு பிரகாரம் உண்மையாக பணம் செலுத்த நேரிடும் காலத்தில் தேவையான அதிகாரம் அல்லது மேலதிக நிதி ஏற்பாடு கிடைக்குமெனும் எதிர்பார்ப்பில் செலவு அல்லது பொறுப்பையேனும் மேற்கொள்ளக் கூடாத போதும், மீளாய்வாண்டில் ஏற்பாட்டை விஞ்சி | 2022 ஆண்டில் ஏற்பாடு காலாண்டுகளாக வேறாக்கி அக் காலாண்டிற்கு வழங்கும் ஏற்பாட்டு எல்லையை விஞ்சாது பொறுப்புக்களிற்கு உட்பட்டுள்ளது. ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டு அளவு காலாண்டிற்குரிய | செலவின விடயமொன்றின் ஏற்பாட்டுத் தொகையை விஞ்சி பொறுப்பு மற்றும் கடப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டெழும் செலவு விடயமொன்றிற்காக ரூபா 15,358,654 ஆன மற்றும் மூலதன செலவின விடயமொன்றிற்காக ரூபா 82,126,924 ஆன பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. | ஒதுக்கீடா நான்கு காலாண்டுகளிற்குரிய ஒதுக்கீடா என தெளிவாகவில்லை. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் பொறுப்பு மற்றும் கடப்பாடு தொடர்பான கூற்றில் கடற்படைக்குரித்தற்ற 02 செலவின விடயங்களிற்காக ரூபா 1,523,936 ஆன பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்தது. | பொறுப்பு மற்றும் கடப்பாடு தொடர்பான கூற்றில் 1203 செலவின விடயத்திற்கு செல்ல வேண்டிய செலவு அசீட்டு தவறொன்றால் 1206 செலவு விடயத்தின் கீழ் ரூபா 858,436 மற்றும் 1207 செலவு விடயத்தின் கீழ் ரூபா 665,500 குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியான செலவு விடயத்தின் கீழ் குறிப்பிட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

| | **அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) | 2018 ஜுலை 16 இன் 03/2018 இலக்க திறைசேரி செயலாளரின் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 07 பந்தி | இணைக்கப்பட்ட வாகனமொன்றிற்காக உரிமையுள்ள அலுவலர் ஒருவர் உரிமை பெறுவது ஒரு இணைக்கப்பட் வாகனத்திற்கு மாத்திரம் என அனைத்து அரச நிறுவன பிரதானிகள் பொறுப்பேற்க வேண்டுமெனவும், இணைக்கப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் அலுவலர்கள் ஏனைய ஏதேனும் தொகுதி வாகனமொன்றை பயன்படுத்த உரித்தற்றவர் என அறிவித்திருந்த | இலங்கை கடற்படையின் ரியாத் அத்மிரால் பதவியின் அலுவலர்கள் மூலஉபாய இயக்க மட்டத்திலான விடயங்கள் மற்றும் இரகசிய தகவல் பொருட்கள், அறிக்கை தொடர்பாக செயற்படுகின்றனர். அதனால் அவர்களுக்கு வெவ்வேறாக தனியான ஆளணி இணைக்கப்பட்டுள்ள | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதும், கடற்படை 18 அலுவலர்களக்காக இணைந்த வாகனம் இரண்டு வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. | துடன் பாதுகாப்பு நடவடிக்கையாக அவர்களையும் எடுத்துச் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. நிலவுகின்ற இந்த நடைமுறையை மாற்றி ஒரு வாகனத்தை வாகன தொகுதிக்கு இணைக்க கவனத்திற் கொள்ளப்படும். | |
| (ஆ) | அரச சேவைகள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2021 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 13/2008 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை. | (i) பெட்ரல் / டீசல் வாகனங்களை பயன்படுத்தும், இணைக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகன உரித்துள்ள அலுவலர்களுக்கு மாதத்திற்கு 135 லீற்றர் அங்கீகரித்திருக்கையில் இலங்கை கடற்படையில் கடமைபுரியும் 03 சிவில் அலுவலர்களிற்கு கடமை பிரயாணங்களிற்காக மாதம் 365 லீற்றர் வீதம் மற்றும் அதற்கிடையில் இரண்டு சிவில் அலுவலர்களிற்கு தனிப்பட்ட பிரயாணங்களிற்காக மாதம் 125 லீற்றர் வீதம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | இலங்கை கடற்படையில் கடமைபுரியும் சிவில் அலுவலர்களிற்கு கடற்படை அலுவர்களிற்கு சமமான உரிமை மற்றும் வசதிகளை வழங்க செய்துள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் படையில் பதவிநிலை அலுவலர்களிற்கு உத்தியோகபூர்வ வாகன வசதி வழங்கும் முறையான கடற்படை கட்டளை 325 பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது. | பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | (ii) கடற்படை தளபதியின் 0325 இலக்க கடற்படை கட்டளையின் 47 பிரிவினூடாக மற்றும் 2020 பெப்ரவரி 13 திகதிய க.ப 05 கொண்ட உள்ளக சுற்றறிக்கை மூலம் கொமான்டோ மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிவகிக்கும் 583 அலுவலர்களிற்கு | 1978 ஆண்டு முதல் இதுவரை முப்படை வாகனங்களை இணைப்பது 1978 மார்ச் 23 திகதிய பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கடிதம் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. முப்படை | மாதாந்த எரிபொருன் லீற்றர் அளவிற்காக பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலவிய எரிபொருள் எல்லையை 305 லீற்றர் முதல் 365 வரையும், கொமதோறு பதவி மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிவகிக்கும் 101 அலுவலர்களிற்கு கடமை எரிபொருள் அளவிற்கு மேலதிகமாக தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக 125 லீற்றர் எரிபொருளும் அங்கீகரித்திருந்த போதும், அதற்காக பாதுகாப்பு அமைச்சின் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அலுவலர்கள் 24 மணிநேரமும் கடமை மேற்கொள்ள கடப்பட்டுள்ளதுடன், நீண்ட பயனங்களிற்காக உத்தியோகபூர்வ வாகனம் பயன்படுத்தப்படுகிறது. அதனால் பதவிநிலை அலுவலர்களின் வாகனங்களிற்காக கடற்படை கட்டளையூடாக குறிப்பிட்ட கிலோ மீற்றர் அளவு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே பொது நிர்வாக சேவைக்கு வழங்கியுள்ள அனைத்து சலுகைகளிற்கும் முப்படையினர் எல்லா நேரத்திலும் உரிமை பெறாததால் அச் சுற்றறிக்கை எந்த நேரமும் முப்படையினரிற்கு தொடர்புபடுவதில்லை. | |
| (இ) | திறைசேரி பிரதி செயலாளரின் 2017 திசெம்பர் 21 இன் 07/2017 இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 பந்தி | கடற்படைக்கு சொந்தமான 59 வாகனங்களிற்காக சுற்றறிக்கை பிரகாரம் பதிவு உரிமையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 03 வாகனங்களை பெற்றுக் கொண்ட தனியார் நிறுவனங்கள் தற்போது இல்லாததால் முன்நடவடிக்கைக்காக கடற்படை சட்ட பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. கடற்படையின் போக்குவரத்து தொகுதிக்கு சொந்தமான 50 வாகனங்களிற்காக மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்துடன் தொடர்புபட்டு பதிவு செய்து கொள்ள நடவடிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்படுகின்றது. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டிக் விதிக்கோவையின் 3.1.4 (i) (ii) (iii) மற்றும் (iv) பிரிவு | மீளாய்வாண்டிற்கான மாதிரி கணக்காய்வு பரிசோதனை பிரகாரம் பெறுமதி ரூபா 66,345,710 ஆன சிவப்பு பொஸ்பரஸ் மற்றும் தோட்டாக்களை கொள்வனவு செய்ய சர்வதேச போட்டி விலைமனு கோரல் முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் உச்ச போட்டியை உறுதி செய்ய பல ஊடகங்களினூடாக பெறுகை அறிவித்தலிற்காக சர்வதேச ரீதியாக பிரசாரமொன்றை வழங்க வேண்டுமென பெறுகை நிறுவனத்திற்கு கட்டளை இடப்படுவதுடன் சர்வதேச ரீதியாக வழங்குனர் மற்றும் ஒப்பந்ததார்கள் பங்குபற்ற சந்தர்பமுள்ள நாடுகளின் தூதுவர் அலுவலகங்களிற்கு, வர்த்தக முகவர்களிற்கு அவ் அறிவித்தலை அனுப்புதல் மற்றும் இணையத் தளங்களில் அவ் அறிவித்தலை வெளியிட வேண்டிய போதும், பெறுகை அறவித்தலை தேசிய பத்திரிகை ஒன்றில் மற்றும் கடற்படை இணையத்தளத்தில் மாத்திரம் வெளியிட்டுள்ளதால் சர்வதேச போட்டி வழங்குனர்களுக்கு பெறுகை நடவடிக்கைகளில் பங்குபற்றவிருந்த சந்தர்ப்பம் குறைவடைந்திருந்தது. | தற்போது வாணிப வெடிபொருள் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை கொள்வனவு செய்யும் அலகிற்கு வெடிபொருள் மற்றும் துப்பாக்கிகளை விநியோகிப்பது பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்ய தேசிய நிறுவனங்களைப் போன்று வெளிநாட்டு உற்பத்தி நிறுவனங்களின் உள்நாட்டு முகவர் ஊடாக ஆவதுடன், அவ் அலகினூடாக தேசிய பத்திரிகைகளில் மற்றும் கடற்படை இணையத்தளத்தில் வெளியிடப்படும் அறிவித்தல்களிற்காக தேசிய நிறுவனங்களை போன்று சர்வதேச நிறுவனங்களின் உள்நாட்டு முகவர்களினால் பதில் வழங்கப்படுகிறது. மேலும் எதிர்காலத்தில் வெளிநாட்டு தூதுவர் அலுவலகங்களிற்கு குறித்த அறிவித்தலை சமர்பித்து அவர்களின் இணையத்தளங்களில் அவ் அறிவித்தலை வெளியிட்டு சர்வதேச போட்டி வழங்குனர்களுக்கு பெறுகை நடவடிக்கைகளில் பங்குபற்ற | பெறுகை வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.4 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களஞ்சிய முற்பணக் கணக்கில் (வெடிபொருள்) 2017 ஆண்டில் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெளிப்படுத்தியிருந்த ரூபா 8,314,236 ஆன நிதி முறைகேடு தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் விசாரணை நடவடிக்கைகளை மீளாய்வாண்டு இறுதி வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | களஞ்சிய முற்பணக் கணக்கில் (வெடிபொருள்) 2017 ஆண்டில் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெளிப்படுத்தியிருந்த ரூபா 8,314,236 ஆன நிதி முறைகேடு தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. | விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வெண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முக்கிய பணிகளிற்கு முறனான செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் நிறுவனமொன்றின் கட்டிடமொன்றை நிர்மாணிக்க கடற்படை ஆளணியை 2019 திசெம்பர் மாதம் முதல் ஈடுபடுத்தி இருந்ததுடன் அதற்காக நிறுவனத்துடன் ஒப்பநதமொன்றில் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வேலைகள் ஆரம்பிக்கப்பட முன்னர் ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திட வேண்டும். |
| (ஆ) | 25 கடற்படையினரை 06 மாத காலத்திற்கு மேற்குறித்த கருத்திட்டத்தில் ஈடுபடுத்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மேலும் 09 மாதங்களிற்கு அக்கருத்திட்டத்திற்கு கடற்படையினரை ஈடுபடுத்த பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது 17 கடற்படையினரை ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | கருத்திட்ட நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில், 2019 ஆண்டில் இடம்பெற்ற உயர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட நிலைமையும், 2020 ஆண்டின் ஆரம்ப காலம் முதல் ஏற்பட்ட கொரோனா 19 தொற்று மற்றும் நாடு முடக்கப்பட்ட நிலைமை, கடந்த காலப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட போராட்டம் காரணமாக சந்தையில் மூலப்பொருட்களின் தட்டுப்பாட்டின் காரணமாக கருத்திட்ட பொறுப்பு | மேலதிக காலப் பகுதிக்கும் கடற்படையினரை ஈடுபடுத்துவதற்கும் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆலயத்தின் தந்தைக்கு உரிய நேரத்தில் கருத்திட்டத்திற்கு தேவையான மூலப்பொருட்களை வேலைத் தளத்திற்கு வழங்க முடியாதிருந்தது. அதன் காரணமாக கருத்திட்டத்தை திட்டமிட்ட காலஎல்லையினுள் பூர்த்தி செய்து கொள்ள முடியவில்லை. | |
| (இ) | 2019 திசெம்பர் ஆரம்பிக்கப்பட்ட இக் கருத்திட்ட நடவடிக்கைகளிற்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகார 06 மாதகால எல்லையினுள் பயிற்றப்பட்ட கடற்படை 1505 மனித நாட்களும், மேற்பார்வை கடற்படை 109 மனித நாட்களும், ஈடுபடுத்தி இருந்ததுடன் அதற்காக மொத்த சம்பள செலவு ரூபா 4,842,000 ஆகவிருந்தது. அவ்வாறே கருத்திட்டத்திற்காக மேலதிக 28 மாத காலத்திற்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரமின்றி மேற்பார்வை கடற்படை 639 மனித நாட்களும், பயிற்றப்பட்ட கடற்படை 9201 மனித நாட்களும் மற்றும் கடற்படை பொறியியல் தொழிநுப்ப 61 மனித நாட்களும் ஈடுபடுத்தி இருந்ததுடன் அதற்காக கணிப்பிடப்பட்ட மொத்த சம்பள செலவு ரூபா 23,486,800 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் தனியார் நிறுவனங்களின் நிர்மாணத்திற்காக 11,515 மனித நாட்களிற்காக மொத்த சம்பள செலவாக ரூபா 28,328,800 செலவிடப்பட்டிருந்த போதும், அதனை மீள்நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தனியார் நிறுவனமொன்றின் நிர்மாணப் பணியாகையால் சம்பள செலவு அல்லது தொழிநுட்ப வாடகையை மீள்நிரப்பிக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | இலங்கை கடற்படை “நில சமுத்திரத்தை சுற்றிய பசுமையான தேசமொன்றை நோக்கி” என்பதனை நோக்காகக் கொண்டு சமூக பொறுப்பை மேற்கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள போதும் தனியார் நிறுவன கட்டிட நிர்மாண பணிகளிற்காக கடற்படையினரை ஈடுபடுத்துவது அந்த பணிக்கூற்றிற்கு உரித்தற்ற செயற்பாடொன்றென அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பணிக்கூற்றிற்கு மற்றும் நோக்கங்களுடன் தொடர்பான பணிகளில் ஈடுபட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு பரிசோதனை திகதியன்று கடற்படைக்கு சொந்தமான பல வகையிலான 3415 மோடார்கள் வாகனங்களுடன் கூடிய போக்குவரத்துத் தொகுதியொன்று காணப்பட்டதுடன் அவற்றில் கடற்படையின் கடமைகளிற்காக 3231 வாகனங்ளை பயன்படுத்தி இருந்தது. 03 வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் 172 வாகனங்கள் திருத்த வேலைகளுக்காக ஒப்படைக்கப்பட்டு இருந்தது. எஞ்சிய 09 வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | கடற்படைக்கு சொந்தமான வாகனத் தொகுதியிலிருந்து ஓட்டததில் இருந்து அகற்றியுள்ள 25 மோடார் வாகனங்ளை பெறுகை நடைமுறையின் கீழ் பொருத்தமாவற்றை மேற்கொண்டு விற்பனை செய்து பூர்த்தி செய்துள்ளதுடன் எஞ்சி 03 வாகனங்களை பொருத்தமாவற்றை மேற்கொண்டு விற்பனை செய்ய தேவையான முன்நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. திருத்த வேலைகளுக்காக அனுப்பியுள்ள 172 வாகனங்களில் திருத்த வேலைகளை கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களிற்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் மோடார் சைக்கில் உள்ளடங்களாக 10 வாகனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்ளை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும் |

## 3.3 முகாமைத்துவம் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------ | ------------------------- | ------------ |
| றாகம வெலிசர கடற்படை முகாமில் தகவல் தொழிநுட்பவியல் தொடர்பாக திற்மையுடன் கூடிய அலுவலர்கள் இருந்த போதும், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் கொள்வனவு செய்யும் அலகின் இருப்பு தொடர்பாக தொகுதி முறைமையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாணிப வெடிபொருள், துப்பாகி மற்றும் தோட்டாக்களை கொள்வனவு செய்யும் அலகின் இருப்பு தொடர்பாக தொகுதி முறைமையொன்றை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | தொகுதி முறைமையொன்றின் மூலம் உள்ளக கட்டுப்பாட்டை பலப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------ | ------------------------- | ------------ |
| கடற்படை ஆளணியில் சிரேஷ்ட மட்டத்தில் 486 உம் மூன்றாம் மட்டத்தில் 6873 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ்வாறே சிவில் சேவை ஆளணியில் சிரேஷ்ட மட்டத்தில் 04 உம், மூன்றாம் மட்டத்தில் 11 உம், இரண்டாம் மட்டத்தில் 72 உம், ஆரம்ப மட்டத்தில் 480 உம் வெற்றிடங்களாக காணப்பட்டன.<br><br>(அ) இலக்கம் 01/2020 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கை பிரகாரம் தற்போது காணப்படும் அனைத்து வெறிறிடங்களிற்காக ஆட்சேர்ப்பு மீண்டும் அறிவிக்கும் வரை இடை நிறுத்தியுள்ளதால் சிவில் ஆளணியின் வெற்றிடங்களை நிரப்ப முடியாதிருந்தது.<br><br>(ஆ) இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப பொது நிர்வாக, உளநாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 பிரகாரம் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மற்றும் அதன் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் ஆரம்ப சேவை வகையில் தற்போது காணப்படும் அனைத்து வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு மீண்டும் அறிவிக்கும் வரை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதால், கடற்படை சிவில் ஆளணியில் ஆரம்ப மட்ட பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களிற்காக ஆளணியை ஆட்சேர்க்க இயலாதுள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து பொது நிர்வாக, உளநாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவித்துள்ளதாக அறிவிக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |